109. The parameter used to ascertain the influence of composition on the susceptibility to the formation of a predominantly Martensitic structure in a steel alloy is
ஒரு எஃகு கலவையில் முக்கியமாக மார்டென்சிடிக் கட்டமைப்பை உருவாக்குவதற்கான கலவை கூறுகளின் பங்களிப்பை கண்டறிய பயன்படும் அளவுரு

(A) Formability
ஃபார்மபிலிட்டி

(B) Ductility
டக்டிலிட்டி

(C) Hardenability
ஹார்டனபிலிட்டி

(D) Malleability
மேலியபிலிட்டி

(E) Answer not known
விடை தெரியவில்லை

110. At very rapid cooling austenite is transformed into Martensite and _____ structure to _____ structure.
அதிவேக குளிர்வித்தலில், ஆஸ்டினைட் மார்டன்சைட்டாக மாறும் மற்றும் _____ அமைப்பிலிருந்து _____ அமைப்பாக மாறும்.

(A) FCC, BCC

(B) BCC, FCC

(C) FCC, HCP

(D) BCC, HCP

(E) Answer not known
விடை தெரியவில்லை

111. Gibbs phase rule, establishes the relationship between the number of degrees of freedom (F), the number of components (C) and the number of phases (P). It is expressed mathematically as

கிப்ஸ் கட்ட விதியானது, விடுமைகளின் எண்ணிக்கை (F) கூறுகளின் எண்ணிக்கை (C) மற்றும் கட்டங்களின் எண்ணிக்கை (P) ஆகியவற்றுக்கு இடையேயான உறவை நிறுவுகிறது. இதை கணித ரீதியாக வெளிப்படுத்த

(A) $C + F = P + 2$

(B) $P + F = C + 2$

(C) $C + F = P - 2$

(D) $P + F = C - 2$

(E) Answer not known
விடை தெரியவில்லை

112. When the cooling rate is greater than the critical cooling rate (140°C/s) the resulting microconstituent in eutectoid Iron - Carbon alloy is

குளிரூட்டும் வீதம் முக்கியமான குளிரூட்டும் விகிதத்தை (140°C/s) விட அதிகமாக இருக்கும்போது யூடெக்டாய்டு இரும்பு கார்பன் கலவையில் உருவாகும் நுண் கூறு

(A) Martensite
மார்டென்சைட்

(B) Pearlite
பேர்லைட்

(C) Bainite
பைனைட்

(D) Tempered Martensite
டெம்பர்ட் மார்டென்சைட்

(E) Answer not known
விடை தெரியவில்லை

113. During the process of cooling, the partial pressure of water vapour and specific humidity _____ until the vapour starts condensing.
குளிர்விக்கும் செயல்பாட்டின்போது நீராவி மற்றும் குறிப்பிட்ட ஈரப்பதத்தின் பகுதி அழுத்தம் _____ அதன் நீராவி ஒடுங்கத் தொடங்கும் வரை.

(A) Increases
அதிகரிக்கிறது

(B) Decreases
குறைகிறது

(C) Increases or decreases
அதிகரிக்கிறது அல்லது குறைகிறது

(D) Remains constant
நிலையானது

(E) Answer not known
விடை தெரியவில்லை

114. What happens to the relative humidity of air if the temperature decreases while the moisture content remains constant?
ஈரப்பதம் நிலையானதாக இருக்கும்போது வெப்பநிலை குறைந்தால் காற்றின் ஈரப்பதத்திற்கு என்ன நடக்கும்?

(A) It increases
அதிகரிக்கிறது

(B) It decreases
இது குறைகிறது

(C) It remains the same
அது அப்படியே உள்ளது

(D) It becomes zero
இது பூஜ்ஜியமாக மாறும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

115. What is the primary function of the capillary tube in a refrigeration or air conditioning system?
குளிர்பதன அல்லது ஏர் கண்டிஷனிங் அமைப்பில் தந்துகி குழாயின் முதன்மை செயல்பாடு என்ன?

(A) To increase the pressure of the refrigerant before it enters the condensor
மின்தேக்கிக்குள் நுழையும் முன் குளிரூட்டியின் அழுத்தத்தை அதிகரிக்க

(B) To act as a thermal expansion device, controlling the flow of refrigerant into the evaporator
வெப்ப விரிவாக்க சாதனமாக செயல்பட, ஆவியாக்கிக்குள் குளிரூட்டியின் ஓட்டத்தை கட்டுப்படுத்துகிறது

(C) To remove heat from the refrigerant before it enters the compressor
அமுக்கிக்குள் நுழையும் முன் குளிரூட்டியில் இருந்து வெப்பத்தை அகற்ற

(D) To store excess refrigerant during system operation
அமைப்பு செயல்பாட்டின் போது அதிகப்படியான குளிர்பதனத்தை சேமிக்க

(E) Answer not known
விடை தெரியவில்லை

116. How does a psychrometer calculate relative humidity?
ஒரு ஈரப்பத அளவி எப்படி சார்பு ஈரப்பதத்தினை கணக்கிடுகிறது?

(A) By comparing the wet bulb and dry bulb temperatures
ஈரகுமிழ் வெப்பநிலை மற்றும் உலர்குமிழ் வெப்பநிலைகளை ஒப்பிடுவதன் மூலமாக

(B) By measuring the speed of air particles
காற்று துகள்களின் வேகத்தினை அளவிடுதல் மூலமாக

(C) By analyzing the color of the sky
வானின் நிறத்தினை பகுப்பாய்வு செய்வதன் மூலமாக

(D) By measuring the rate of precipitation
வீழ்படிவாக்கல் விகிதங்களை அளவிடுதல் மூலமாக

(E) Answer not known
விடை தெரியவில்லை

117. Match List I with List II and select the correct answer using the codes given below the lists :

பட்டியல் I மற்றும் பட்டியல் II ஐப் பொறுத்தி கீழ்கண்ட குறியீடுகளைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.

List I பட்டியல் I	List II பட்டியல் II
(a) Bell Coleman refrigeration பெல் காலமன் குளிர்பதனம்	1. Compressor அழுத்தும் உபகரணம்
(b) Vapour compression refrigeration ஆவி அழுத்த குளிர்பதனம்	2. Generator உருவாக்கி
(c) Absorption refrigeration உள்ளீர்த்தல் குளிர்பதனம்	3. Flash chamber ஒளிரும் கலன்
(d) Jet refrigeration ஜெட் குளிர்பதனம்	4. Expansion cylinder விரிவாக்க உருளை

	(a)	(b)	(c)	(d)
(A)	1	4	3	2
(B)	4	1	3	2
(C)	1	4	2	3
(D)	4	1	2	3

(E) Answer not known
விடை தெரியவில்லை

118. At 100% relative humidity, the wet bulb temperature is
ஒப்பு ஈரப்பதம் 100% அளவில் இருக்கும் போது, ஈரக் குமிழ் வெப்பநிலை

(A) more than dew point temperature
பனிப்புள்ளி வெப்பநிலையை விட அதிகம்

(B) same as dew point temperature
பனிப்புள்ளி வெப்பநிலைக்கு சமம்

(C) less than dew point temperature
பனிப்புள்ளி வெப்பநிலையை விட குறைவு

(D) equal to ambient temperature
சுற்றுப்புற வெப்பநிலைக்கு சமம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

119. The sensible heat factor for auditorium or cinema hall is generally kept as
ஆடிட்டோரியம் (Auditorium) அல்லது சினிமா அரங்கிற்கான சென்சிபிள் (Sensible) வெப்ப காரணி பொதுவாக இவ்வாறு வைக்கப்படுகிறது

(A) 0.6
(B) 0.7
(C) 0.8
(D) 0.9
(E) Answer not known
விடை தெரியவில்லை

120. For same compression ratio and same heat rejection
ஒரே சுருக்க விகிதம் மற்றும் ஒரே வெப்ப நிராகரிப்பின் போது

(A) $\eta_{diesel} > \eta_{otto} > \eta_{dual}$
(B) $\eta_{otto} > \eta_{diesel} > \eta_{dual}$
(C) $\eta_{otto} > \eta_{dual} > \eta_{diesel}$
(D) $\eta_{dual} > \eta_{diesel} > \eta_{otto}$
(E) Answer not known
விடை தெரியவில்லை

121. Which of the following processes is isentropic in the Rankine cycle?
ரேங்கைன் சுழற்சியில் பின்வரும் செயல்முறைகளில் மாறா என்ட்ரோபி (ஐசென்ரோபிக்) எதுவாக இருக்கிறது?

(A) Pumping
உந்துதல்

(B) Boiling
கொதித்தல்

(C) Expansion
விரிவாக்கம்

(D) Condensation
ஒடுக்கம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

122. For the same compression ratio and same heat input the Otto, diesel and dual cycle efficiencies can be given as
அதே சுருக்க விகிதம் மற்றும் அதே வெப்ப உள்ளீடு ஓட்டோ, டீசல் மற்றும் இரட்டை சுழற்சி செயல்திறன் எந்த பின்வரும் வரிசையில் கொடுக்கபடலாம்

(A) $\eta_{otto} > \eta_{dual} > \eta_{diesel}$

(B) $\eta_{otto} > \eta_{diesel} > \eta_{dual}$

(C) $\eta_{diesel} > \eta_{dual} > \eta_{otto}$

(D) $\eta_{diesel} = \eta_{dual} = \eta_{otto}$

(E) Answer not known
விடை தெரியவில்லை

123. In regenerative cycle feed water is heated by
ரிஜெனரேட்டிவ் சுற்றில், உள்ளீட்டு நீரை எதனை கொண்டு வெப்பப்படுத்துகிறோம்

(A) Exhaust gases
வெளியீட்டு வாயுக்கள்

(B) Heaters
வெப்பப்படுத்திகள்

(C) Draining steam from the turbine
விசையாழி (turbine) லிருந்து நீராவியை எடுத்து

(D) Economiser
சிக்கனபடுத்தி

(E) Answer not known
விடை தெரியவில்லை

124. Crude petroleum contains only 10-15% of gasoline. When it is thermally cracked the gasoline reaches to _____
கச்சா பெட்ரோலியத்தில் 10-15% பெட்ரோல் மட்டுமே உள்ளது. கச்சா பெட்ரோலில் வெப்ப விரிசல் ஏற்படும் போது பெட்ரோலியம் அளவு எவ்வளவு இருக்கும்?

(A) 15% to 25%

(B) 25% to 35%

(C) 20% to 30%

(D) 30% to 40%

(E) Answer not known
விடை தெரியவில்லை

125. The throttle valve controls the supply of
திராட்டில் வால்வு, கீழ்கண்டவற்றுள் எதனை அனுப்புவதை கட்டுப்படுத்தும்

(A) Air only
காற்று மட்டும்

(B) Fuel only
எரிபொருள் மட்டும்

(C) Air fuel mixture
காற்று-எரிபொருள் கலவையை

(D) Lubricant oil
லூப்ரிகண்ட் எண்ணெயை

(E) Answer not known
விடை தெரியவில்லை

126. A rope brake was used to measure the brake power of single cylinder, four stroke cycle petrol engine. It was found that the torque due to brake load is 175 Nm and the engine makes 500 rpm. Determine the brake power developed by the engine
ஒற்றை சிலிண்டர், நான்கு ஸ்ட்ரோக் சைக்கிள் பெட்ரோல் இயந்திரத்தின் பிரேக் சக்தியை அளவிட கயிறு பிரேக் பயன்படுத்தப்பட்டது. பிரேக் சுமை காரணமாக முறுக்கு விசை 175 Nm மற்றும் இயந்திரம் 500 rpm செய்கிறது என்று கண்டறியப்பட்டது. இயந்திரத்தால் உருவாக்கப்பட்ட பிரேக் சக்தியைத் தீர்மானிக்கவும்

(A) 6.53 kW

(B) 7.35 kW

(C) 8.28 kW

(D) 9.16 kW

(E) Answer not known
விடை தெரியவில்லை

127. What component of a wind turbine converts wind energy into mechanical energy?
காற்றாலை விசையாழியின் எந்த கூறு காற்று ஆற்றலை இயந்திர ஆற்றலாக மாற்றுகிறது?

(A) Generator
ஜெனரேட்டர்

(B) Rotor blades
ரோட்டார் கத்திகள்

(C) Gear box
கியர் பாக்ஸ்

(D) Tower
கோபுரம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

128. Choose the right matches among the following :
பின்வருவனவற்றில் சரியான பொருத்தங்களைத் தேர்ந்தெடுக்கவும் :

(1) Ceramic – Concrete
செராமிக் – கான்கிரீட்

(2) Thermosetting polymer – Nylon
தெர்மோசெட்டிங் பாலிமர் – நைலான்

(3) Composite – Fibre glass
கூட்டு – ஃபைபர் கிளாஸ்

(4) Magnetic material – Alnico
காந்தப் பொருள் – அல்நிகோ

(A) (1) and (2) are correct
(1) மற்றும் (2) சரியானவை

(B) (2) and (3) are correct
(2) மற்றும் (3) சரியானவை

(C) (3) and (4) are correct
(3) மற்றும் (4) சரியானவை

(D) (1) and (4) are correct
(1) மற்றும் (4) சரியானவை

(E) Answer not known
விடை தெரியவில்லை

129. During the combustion process, which parameter affects the adiabatic combustion temperature
எரிப்பு செயல்பாட்டில், பின்வரும் காரணிகளில் எது முதன்மையாக அடியாபாடிக் சுடர் வெப்பநிலையை பாதிக்கிறது

(A) Fuel type and composition
எரிபொருள் வகை மற்றும் கலவை

(B) Ambient temperature
சுற்றுப்புற வெப்பநிலை

(C) Pressure of the surroundings
சுற்றுப்புறத்தின் அழுத்தம்

(D) Both (A) and (C)
(A) மற்றும் (C) இரண்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

130. If the efficiency of a carnot engine is 40%, what is the ratio of the temperatures of the hot and cold reservoirs?
கார்னோட் எஞ்சினின் செயல்திறன் 40% என்றால், சூடான மற்றும் குளிர்ந்த வெப்ப தேக்கங்களின் வெப்பநிலையின் விகிதம் என்ன?

(A) 1.67

(B) 1.50

(C) 2.50

(D) 2.00

(E) Answer not known
விடை தெரியவில்லை

131. Which of the following is an example of Maxwell's relations?
பின்வருபவைகளில் எது மேக்ஸ்வெல் தொடர்புக்குரிய உதாரணம் என கூறு?

(A) $\left(\frac{\partial S}{\partial V}\right)_T = \left(\frac{\partial P}{\partial T}\right)_V$

(B) $\left(\frac{\partial U}{\partial T}\right)_V = \left(\frac{\partial P}{\partial T}\right)_V$

(C) $\left(\frac{\partial S}{\partial P}\right)_T = \left(\frac{\partial V}{\partial T}\right)_P$

(D) $\left(\frac{\partial U}{\partial V}\right)_S = \left(\frac{\partial P}{\partial T}\right)_S$

(E) Answer not known
விடை தெரியவில்லை

132. Calculate the availability of a system that absorbs 15,000 kJ of heat from a heat source of 500 k, while the environment is at 290 k.
சுற்றுச்சூழல் 290 k ல் இருக்கும் போது, 500 k வெப்பமூலத்திலிருந்து 15,000 kJ வெப்பத்தை உறிஞ்சும் அமைப்பின் கிடைக்கும் தன்மையைக் கணக்கிடுங்கள்

(A) 5600 kJ

(B) 8700 kJ

(C) 6300 kJ

(D) 7200 kJ

(E) Answer not known
விடை தெரியவில்லை

133. Availability of a system at any given state is
எளிதில் கிடைக்க கூடிய ஒரு அமைப்பின் நிலை என்பது எதனை பொறுத்தது

(A) A property of the system
அந்த அமைப்பின் குணாதிசயங்களை பொறுத்தது

(B) The total energy of the system
அந்த அமைப்பின் மொத்த சக்தியை பொறுத்தது

(C) The maximum work obtainable as system goes to deed state
அந்த அமைப்பு கடைசி மட்டநிலைக்கு செல்வதற்கு பெறக்கூடிய அதிகபட்ச வேலையை பொறுத்தது

(D) The maximum useful work obtainable as the system goes to deed state
அந்த அமைப்பு கடைசி மட்ட நிலைக்கு செல்வதற்கு உபயோகபடுத்த கூடிய வேலையை பொறுத்தது

(E) Answer not known
விடை தெரியவில்லை

134. What is the first corollary of the carnot theorem?
கார்னோட் தேற்றத்தின் முதல் தொடர்ச்சி என்ன?

(A) All real engines are more efficient than carnot engines
அனைத்து உண்மையான என்ஜின்களும் கார்னோட் என்ஜின்களை விட திறமையானவை

(B) All reversible engines operating between the same temperatures have the same efficiency
அதே இரண்டு வெப்பநிலைகளுக்கு இடையில் இயங்கும் அனைத்து மீளக்கூடிய இயந்திரங்களும் ஒரே திறன் கொண்டவை

(C) Heat engine cannot be converted into work with some loss
சில இழப்புகள் இல்லாமல் வெப்பத்தை வேலையாக மாற்ற முடியாது

(D) The efficiency of an irreversible engine can be increased indefinitely
மீளமுடியாத இயந்திரத்தின் செயல்திறனை காலவரையின்றி அதிகரிக்க முடியும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

135. Which of the following best describes an adiabatic process?
பின்வருவனவற்றில் எது அடியாபாடிக் செயல்முறையை சிறப்பாக விவரிக்கிறது?

(A) Heat is exchanged with the surroundings
சுற்றுச்சூழலுடன் வெப்பம் பரிமாறப்படுகிறது

(B) No heat is exchanged with the surroundings
சுற்றுப்புறத்துடன் வெப்பம் பரிமாறப்படுவதில்லை

(C) Temperature remains constant
வெப்பநிலை மாறாமல் இருக்கும்

(D) The system is at constant volume
உள்ளடக்கம் நிலையான அளவில் உள்ளது

(E) Answer not known
விடை தெரியவில்லை

136. A U-tube differential manometer
U-குழாய் வேறுபாடு மானோமீட்டர் பயன்படும் விதம்

(A) is used upright when pressure difference is large
நேராக அழுத்த வேறுபாடு அதிகமாக உள்ள போது

(B) is used inverted when pressure difference is small
தலைகீழாக அழுத்த வேறுபாடு சிறியதாக உள்ள போது

(C) is used when pressure difference is large
அழுத்த வேறுபாடு அதிகமாக உள்ள போது

(D) cannot be used in inverted position
தலைகீழாக உள்ள நிலையில் உபயோகிக்க இயலாது

(E) Answer not known
விடை தெரியவில்லை

137. Which of the following processes is an example of an irreversible process?

பின்வரும் செயல்முறைகளில் எது மீளமுடியாத செயல்முறைக்கு எடுத்துக்காட்டு?

(A) A perfectly insulated container at equilibrium
சமநிலையில் ஒரு முழுமையான காப்பிடப்பட்ட கொள்கலன்

(B) The melting of ice at 0°C
0°C இல் பனி உருகுதல்

(C) Free expansion
கட்டில்லா விரிவாக்கம்

(D) The compression of a gas at constant temperature
ஒரு நிலையான வெப்பநிலையில் ஒரு வாயுவின் சுருக்கம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

138. The general law of expansion or compression of a perfect gas is PV^n = const. The value of n for a constant volume process is

ஒரு நல்லியல்பு வாயுவினை மாறா பருமச் செயல்முறையில் விரிவாக்கம் செய்யவோ அல்லது சுருக்கம் செய்யவோ பயன்படுத்தும் சமன்பாடு PV^n = மாறிலி ஆக இருப்பின் 'n' ன் மதிப்பு என்ன?

(A) 0

(B) ∞

(C) 1

(D) 1.4

(E) Answer not known
விடை தெரியவில்லை

139. Which one of the following is correct on basis of the second law of thermodynamics?
வெப்ப இயக்கவியலின் இரண்டாவது விதியின் அடிப்படையில் பின்வருவனவற்றில் எது சரியானது?

(A) For any spontaneous process, the entropy of the universe increases
எந்தவொரு தன்னிச்சையான செயல்முறைக்கும், பிரபஞ்சத்தின் என்ட்ரோபி அதிகரிக்கிறது

(B) $\Delta S = q_{rev}/T$ at constant temperature
நிலையான வெப்பநிலையில் $\Delta S = q_{rev}/T$

(C) Efficiency of the stirling cycle is more than that of a carnot cycle
ஸ்டிர்லிங் சுழற்சியின் செயல்திறன் கார்னோட் சுழற்சியை விட அதிகமாக உள்ளது

(D) $\Delta E = q + W$ (The symbols have their usual meaning)
$\Delta E = q + W$ (சின்னங்கள் அவற்றின் வழக்கமான பொருளைக் கொண்டுள்ளன)

(E) Answer not known
விடை தெரியவில்லை

140. The fuels in order of decreasing knock tendency for SI engines are
ஒரு எரியூட்டு பொறியில் செலுத்தப்படும் எரிபொருளின் இடிச்செறிவு குறைவதற்கான காரணிகளை வரிசைப்படுத்துக

(A) Paraffins, Aromatics, Napthenes
பாராஃபின் (வெண்மெழுகு), அரோமேட்டிக்ஸ் (நறுமணம்), நாஃப்தீன்ஸ்

(B) Napthenes, Paraffins, Aromatics
நாஃப்தீன்ஸ், பாராஃபின், அரோமேட்டிக்ஸ்

(C) Paraffins, Napthenes, Aromatics
பாராஃபின், நாஃப்தீன்ஸ், அரோமேட்டிக்ஸ்

(D) Napthenes, Aromatics, Paraffins
நாஃப்தீன்ஸ், அரோமேட்டிக்ஸ், பாராஃபின்

(E) Answer not known
விடை தெரியவில்லை

141. A system and its environment put together constitute
ஒரு அமைப்பும் அதன் சுற்றுப்புறச்சூழலும் ஒன்றிணைந்ததை என்னவென்று கூறுவார்கள்

(A) an adiabatic system
வெப்பமாறா அமைப்பாக கருதப்படும்

(B) an isolated system
தனிமைப்படுத்தப்பட்ட அமைப்பாக கருதப்படும்

(C) a homogeneous system
ஒரே விதமான (அ) சமசீரான அமைப்பாக கருதப்படும்

(D) a segregated system
பிரிக்கப்பட்ட அமைப்பாக கருதப்படும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

142. Joule's law states that the specific internal energy of a gas depends only on
ஜூல்ஸ் விதிப்படி, ஒரு வாயுவின் திட்டவட்டமான உள்ஆற்றல் கீழ்கண்டவற்றுள் எதனை பொறுத்து மட்டும் அமையும்

(A) Pressure of the gas
வாயுவின் அழுத்தம்

(B) Volume of the gas
வாயுவின் கன அளவு

(C) Temperature of the gas
வாயுவின் வெப்பநிலை

(D) Density of the gas
வாயுவின் அடர்த்தி

(E) Answer not known
விடை தெரியவில்லை

143. The processes occurring in a Ramjet engine can be represented by a
ராம்ஜெட் (Ramjet) எஞ்சினில் நிகழும் செயல்முறையை இதன் மூலம் குறிப்பிடலாம்

(A) Open circuit Brayton cycle
திறந்த சுற்று பிரேட்டன் (Brayton) சுழற்சி

(B) Closed circuit Brayton cycle
மூடப்பட்ட சுற்று பிரேட்டன் (Brayton) சுழற்சி

(C) Open circuit Ericsson cycle
திறந்த சுற்று எரிக்சன் (Ericsson) சுழற்சி

(D) Closed circuit Ericsson cycle
மூடப்பட்ட சுற்று எரிக்சன் (Ericsson) சுழற்சி

(E) Answer not known
விடை தெரியவில்லை

144. Under adiabatic flow condition, in a Convergent Divergent nozzle the conditions of Total Enthalpy (h_0), Total Pressure (P_0) and Total Temperature (T_0) are

Convergent Divergent குழாய்முனையில் வெப்பம் மாறாப்போக்கு நிலையின் நிலைகளை எழுதுக.

(h_0 – மொத்த வெப்ப அடக்கம்

P_0 – மொத்த அழுத்தம்

T_0 – மொத்த வெப்பநிலை)

(A) h_0 = constant, $T_0 \neq$ constant and $P_0 \neq$ constant

h_0 = மாறாதது, $T_0 \neq$ மாறாதது மற்றும் $P_0 \neq$ மாறாதது

(B) $h_0 = T_0 = P_0$ = constant

$h_0 = T_0 = P_0$ = மாறாதது

(C) $h_0 = T_0$ = constant and $P_0 \neq$ constant

$h_0 = T_0$ = மாறாதது மற்றும் $P_0 \neq$ மாறாதது

(D) $h_0 \neq$ constant, T_0 = constant and $P_0 \neq$ constant

$h_0 \neq$ மாறாதது, T_0 = மாறாதது மற்றும் $P_0 \neq$ மாறாதது

(E) Answer not known
விடை தெரியவில்லை

145. The head of water from the centre of the orifice which is fitted to one side of the tank is maintained at 2 m of water. The tank is not allowed to move and the diameter of orifice is 100 mm and co-efficient of velocity $C_v = 0.97$. Find the velocity of jet.
ஒரு நகராத தொட்டியின் ஒரு பக்கத்தில் உள்ள துளையின் மையத்தில், நீர் மட்டு மதிப்பு 2 மீட்டர். தொட்டி நகர அனுமதிக்கப்படவில்லை துளையின் விட்டம் 100 மிமீ மற்றும் நீரின் திசைவேகக் கெழு $C_v = 0.97$ எனில், நீர்த்தாரையின் திசைவேக மதிப்பு எவ்வளவு?

(A) 5.08 m/s
5.08 மீட்டர்/செகண்ட்

(B) 8.42 m/s
8.42 மீட்டர்/செகண்ட்

(C) 6.07 m/s
6.07 மீட்டர்/செகண்ட்

(D) 7.23 m/s
7.23 மீட்டர்/செகண்ட்

(E) Answer not known
விடை தெரியவில்லை

146. For frictional flow inside a constant diameter duct, identify the correct statement
நிலையான விட்ட நாளத்தின் உராய்வு பாய்வு பற்றி சரியான தகவலை அடையாளம் காண்

(A) at limiting state, enthalpy is maximum
கட்டுப்படுத்தப்பட்ட நிலையில், வெப்ப அடக்கம் அதிகபட்சமாகும்

(B) at limiting state, mach number is maximum
கட்டுப்படுத்தப்பட்ட நிலையில், மாக் எண் அதிகபட்சமாகும்

(C) at limiting state, entropy is maximum
கட்டுப்படுத்தப்பட்ட நிலையில், என்ட்ரோபி அதிகபட்சமாகும்

(D) at limiting state, sound velocity is maximum
கட்டுப்படுத்தப்பட்ட நிலையில், ஒலி வேகம் அதிகபட்சமாகும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

147. To avoid cavitation in centrifugal pumps
மைய விலக்கு விசையியக்க பம்ப் (pump)களில் குழிவுறுதலைத் (cavitation) தவிர்க்க

(A) suction pressure should be high
உறிஞ்சும் அழுத்தம் அதிகமாக இருக்க வேண்டும்

(B) suction pressure should be low
உறிஞ்சும் அழுத்தம் குறைவாக இருக்க வேண்டும்

(C) delivery pressure should be high
விநியோக அழுத்தம் அதிகமாக இருக்க வேண்டும்

(D) delivery pressure should be low
விநியோக அழுத்தம் குறைவாக இருக்க வேண்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

148. The phenomenon by which the liquid rises into a thin glass tube above or below its general level
ஒரு திரவம் அதன் பொது மட்டத்திற்கு மேலே அல்லது கீழே ஒரு மெல்லிய கண்ணாடிக் குழாயாக உயரும் நிகழ்வு

(A) Surface Tension
மேற்பரப்பு இழுவிசை

(B) Capillary
நுண்குழாய்த் தன்மை

(C) Cohesion
இணைத் தன்மை

(D) Adhesion
ஒட்டும் தன்மை

(E) Answer not known
விடை தெரியவில்லை

149. The value of kinetic energy correction factor for fully developed laminar pipe flow is
இயக்க ஆற்றல் சரி செய்யும் காரணியின் மதிப்பு, குழாயில் அடுக்கபாய்வு நிலை முழுமையாக நடைபெறும் பொழுது இருக்கும் மதிப்பானது

(A) 1.04
(B) 1.11
(C) 1.5
(D) 2.0
(E) Answer not known
விடை தெரியவில்லை

150. For maximum efficiency, the ratio of Pelton wheel speed to jet speed is
அதிகபட்ச செயல்திறனுக்காக, பெல்டன் சக்கரவேகம் மற்றும் ஜெட் வேகத்தின் விகிதம்

(A) Same
அதே
(B) One Fourth
நான்கில் ஒரு பங்கு
(C) Half
பாதி
(D) Thrice
மூன்று முறை
(E) Answer not known
விடை தெரியவில்லை

151. The discharge through Kaplan Turbine is given by
[D_0 – Outer diameter of the runner
D_b – Diameter of hub
V_{f_1} – Velocity of flow at inlet]
கப்லான் விசையாழின் வெளியேற்றமானது
[D_0 – சுழலியின் வெளிப்புற விட்டம்
D_b – மையப்பகுதியின் (ஹப்) விட்டம்
V_{f_1} – உட் செல்லும் பாய்வின் திசைவேகம்]

(A) $Q = \pi\, DBV_f$

(B) $Q = \frac{\pi}{4} d^2 \times \sqrt{2gH}$

(C) $Q = \frac{\pi}{4}\left[D_0{}^2 - D_b{}^2\right] \times V_{f_1}$

(D) $Q = 0.9\, \pi\, DBV_f$

(E) Answer not known
விடை தெரியவில்லை

152. The flow is said to be turbulent when Reynold's number is
எந்த ரெனால்ட்ஸ் எண்ணில், ஒரு பாய்வானது கொந்தளிப்புப் பாய்வாகக் கூறப்படுகிறது.

(A) Less than 1000
1000க்கு குறைவாக

(B) Equal to 2000
2000க்கு சமமாக

(C) Greater than 4000
4000க்கு அதிகமாக

(D) Between 2000 to 3000
2000த்திற்கும் 3000த்திற்கும் இடையில்

(E) Answer not known
விடை தெரியவில்லை

153. For laminar viscous flow between two stationary plates has the ratio of maximum velocity to average velocity _____.
இரு நிலையான தட்டுகளுக்கிடையேயான அடுக்கோட்டப் பாகியல் விசையின் அதிகபட்ச திசைவேகம் மற்றும் சராசரி திசைவேகங்களுக்கான விகிதம்.

(A) $2/3$
(B) $3/2$
(C) $4/3$
(D) $5/4$
(E) Answer not known
விடை தெரியவில்லை

154. For power transmitted through a pipe line, the maximum transmission efficiency equals
ஒரு குழாய் கோடு வழியாக அனுப்பப்படும் சக்திக்கு, அதிகபட்ச பரிமாற்ற செயல்திறன் கீழ்கண்டவற்றிற்கு சமம்

(A) 20%
(B) 45%
(C) 66.67%
(D) 71.5%
(E) Answer not known
விடை தெரியவில்லை

155. Two horizontal plates are placed 1.25 cm apart, the space between them being filled with oil of viscosity 14 poises. Calculate the shear stress in oil if upper plate is moved with a velocity of 2.5 m/s.
இரண்டு கிடைமட்ட தட்டுகள் 1.25 செ.மீ இடைவெளியில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கிடையே உள்ள இடைவெளி 14 பாகுத்தன்மை கொண்ட எண்ணெயால் நிரப்பப்படுகிறது. மேல்தட்டு 2.5 மீ/வி வேகத்தில் நகர்த்தப்பட்டால் எண்ணெயில் உள்ள வெட்டு அழுத்தத்தைக் கணக்கிடுங்கள்.

(A) 283 N/m^2
(B) 280 N/m^2
(C) 282 N/m^2
(D) 285 N/m^2
(E) Answer not known
விடை தெரியவில்லை

156. Find the loss of head when a pipe of diameter 200 mm is suddenly enlarged to a diameter of 400 mm. The rate of flow of water through the pipe is 250 litres/s.

200 மிமீ விட்டம் கொண்ட ஒரு குழாய் திடீரென 400 மிமீ விட்டத்திற்கு பெரிதாக்கப்படும்போது ஹெட் இழப்பைக் கண்டறியவும். குழாய் வழியாக நீர் ஓட்டத்தின் வீதம் 250 லிட்டர்/வி.

(A) 181.6 m of water
181.6 மீ நீர்

(B) 1. 816 m of water
1. 816 மீ நீர்

(C) 18.16 m of water
18.16 மீ நீர்

(D) 18.15 m of water
18.15 மீ நீர்

(E) Answer not known
விடை தெரியவில்லை

157. Minor head loss in a pipeline :
குழாய் தொடரில் உருவாகும் குறைந்தபட்ச ஆற்றல் இழப்பு :

1. Have small magnitude
குறைந்த அளவில் உள்ளது
2. Depend on flow velocity
பாய்ம திசைவேகத்தைப் பொறுத்தது
3. Are caused due to local disturbance in flow
உள்ளிட பாய்ம தடைகளைப் பொறுத்து உருவாகிறது
4. Can be expressed as a fraction of kinetic energy or equivalent length
இயக்க ஆற்றலின் பின்னம் அல்லது ஈடான நீளத்தைப் பொறுத்தது
5. Are caused by resistance at the surface
மேற்பரப்பிலுள்ள தடைகளைப் பொறுத்து உருவாகிறது

Which of the statements made above are correct?
மேற்குறிப்பிட்டுள்ள அறிக்கைகளில் எவை சரியானது?

(A) 1, 2 and 3
1, 2 மற்றும் 3

(B) 1, 2 and 4
1, 2 மற்றும் 4

(C) 2, 4 and 5
2, 4 மற்றும் 5

(D) 3 and 5
3 மற்றும் 5

(E) Answer not known
விடை தெரியவில்லை

158. A stone weighs 392.4 N in air and 196.2 N in water. Compute the volume of stone.
ஒரு கல் காற்றில் 392.4 N மற்றும் தண்ணீரில் 196.2 N எடை கொண்டது. கல்லின் கொள்ளளவைக் கணக்கிடவும்.

(A) 3×10^4 cm^3

(B) 5×10^4 cm^3

(C) 4×10^4 cm^3

(D) 2×10^4 cm^3

(E) Answer not known
விடை தெரியவில்லை

159. Falling drops of water become spherical due to
விழும் நீர்த்துளிகள் கோள வடிவமாக மாறுவதற்கு காரணம்

(A) Adhesion
ஒட்டுதல் தன்மை

(B) Viscosity
பாகுத்தன்மை

(C) Absorption
உறிஞ்சுதல் தன்மை

(D) Surface Tension
பரப்பு இழுவிசை தன்மை

(E) Answer not known
விடை தெரியவில்லை

160. Bernoulli's equation is applicable between any two points is
பெர்னௌலியின் சமன்பாடு எந்த இரண்டு புள்ளிகளுக்கு இடையில் பொருந்தும்

(A) Rotational flow of an incompressible fluid
அமுக்க முடியாத திரவத்தின் சுழற்சி ஓட்டம்

(B) Irrotational flow of compressible (or) incompressible fluid
அமுக்கக்கூடிய அல்லது அமுக்க முடியாத திரவத்தின் சுழற்சியற்ற ஓட்டம்

(C) Steady, rotational flow of an incompressible fluid
நிலையான, அமுக்க முடியாத திரவத்தின் சீரான சுழற்சி ஓட்டம்

(D) Steady, irrotational flow of an incompressible fluid
நிலையான, அமுக்க முடியாத திரவத்தின் சுழற்சியற்ற ஓட்டம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

161. A venturimeter is used for measuring
வெஞ்சுரி அளவியானது எதனை அளக்கப் பயன்படுகிறது?

(A) Pressure
அழுத்தம்

(B) Flow rate
பாய்ம வீதம்

(C) Total energy
மொத்த ஆற்றல்

(D) Hydrodynamic
நீர்ம இயக்கக நிலைமட்டம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

162. The bulk modulus of elasticity of a fluid is defined as _____ (where 'p' – pressure ; 'v' – volume)
ஒரு பாய்மத்தின் மீள்மை பருமக் குணகம் எவ்வாறு வரையறுக்கப்படுகிறது? ('p' – அழுத்தம் ; 'v' – கன அளவு)

(A) $-\frac{dv/v}{dp}$

(B) $-\frac{dp}{dv/v}$

(C) $\sqrt{\frac{dp}{d\rho}}$

(D) $\frac{dp}{d\rho}$

(E) Answer not known
விடை தெரியவில்லை

163. Law of Gearing is satisfied, if
பற்சக்கர விதி திருப்தி அடைந்தால்

(A) Two surfaces slide smoothly
இரண்டு மேற்பரப்புகளும் மென்மையாக உராயும்

(B) Common normal at the point of contact passes through the pitch point on the line joining the centres of rotation
சுழல் மையங்களை இணைக்கும் கோட்டிலுள்ள சுருதிப் புள்ளி வழியாக நேர்குத்துக் கோட்டில் தொடு புள்ளி செயல்படும்

(C) Number of teeth = P.C.D/Module
பற்களின் எண்ணிக்கை = P.C.D/பற்சக்கர தொகுதி

(D) Addendum is greater than dedendum
பற்சக்கர பல்லிடை மேல்வட்டமானது பற்சக்கர பல்லிடை அடிவட்டத்தை விட அதிகமாக இருக்கும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

164. The design of a brake depends upon the
பிரேக்கின் வடிவமைப்பு எதை பொறுத்தது

(A) Peripheral velocity of brake drum
பிரேக் டிரம்மின் புற வேகம்

(B) Unit pressure between the braking surfaces
பிரேக்கின் மேற்பரப்புகளுக்கான இடையின் அலகு அழுத்தம்

(C) Projected area of friction surfaces
உராய்வு மேற்பரப்புகளின் திட்டமிட்ட பகுதி

(D) All of the above
மேலே உள்ள அனைத்தும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

165. Which one of the following nuts is not associated with locking applications?
பின்வரும் நட்டுகளில் எது பூட்டுதல் பயன்பாடுகளுடன் தொடர்புடையது அல்ல?

(A) Penn
பென்

(B) Sawn nut
சான் நட்டு

(C) Castle nut
கேஸ்டல் நட்டு

(D) Pen nut
பென் நட்டு

(E) Answer not known
விடை தெரியவில்லை

166. The coefficient of friction in rolling contact bearing is
உருளும் தொடர் தாங்கியின் உராய்வு குணகம்

(A) 0.1

(B) 0.0001

(C) 0.0018

(D) 0.005

(E) Answer not known
விடை தெரியவில்லை

167. Factor of safety for fatigue loading is the ratio of
அயர்வு சுமை ஏற்றுதலின் காப்புகாரணி என்பது எதன் விகிதங்களாகும்.

(A) Elastic limit to the working stress
மீள்மை எல்லைக்கும், செயல்படு தகைவுக்கும்

(B) Young's modulus to the ultimate tensile strength
எய்ங்குணகத்திற்கும், அறுதி இழுவிசைக்கும்

(C) Endurance limit to the working stress
அயர்வு எல்லைக்கும், செயல்படு தகைவுக்கும்

(D) Elastic limit to the yield point
மீள்மை எல்லைக்கும், நெகிழ்வு நிலைக்கும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

168. Two springs of stiffness 20N/mm and 30N/mm respectively are connected in series, the stiffness of the composite spring will be given by _____ N/mm.
ஒரே தொடரில் இணைக்கப்பட்ட இரண்டு ஸ்பிரிங்கின் விறைப்புத்தன்மையானது முறையே 20N/mm மற்றும் 30N/mm ஆகும். கூட்டு ஸ்பிரிங்கின் விறைப்புத்தன்மை ———————— ஆகும்.

(A) 50

(B) 600

(C) 12

(D) 1/12

(E) Answer not known
விடை தெரியவில்லை

169. The spindle of a m/c tool runs at 1000 rpm and has a life of 300 days/year for 5 years. What will be its life in "mr"?
1000 rpm வேகத்தில் சுழலும் ஒரு இயந்திரத்தின் சுழல் அச்சு 300 நாட்கள்/வருடம் வீதம் 5 வருட ஆயுளைச் கொண்டுள்ளது எனில் அதில் ஆயுள் "mr" ல் எவ்வளவு?

(A) 72
(B) 720
(C) 68
(D) 680
(E) Answer not known
விடை தெரியவில்லை

170. Crowning of pulley is done to
ஒரு கப்பியின் உச்சி மேடேற்றப்பட காரணம்

(A) increase the tension in the belt
பட்டையின் இழுவிசையை கூட்ட
(B) increase the angle of contact
பட்டையின் தொடர்பு கோணத்தை கூட்ட
(C) prevent slipping of belt
பட்டை நழுவுதலை தடுக்க
(D) decrease the angle of contact
பட்டையின் தொடர் கோணத்தை குறைக்க
(E) Answer not known
விடை தெரியவில்லை

171. Which of the following stresses developed in the wall of a thin cylinder when it is subjected to internal fluid pressure?
ஒரு மெல்லிய உருளையின் சுவரில் உள்ள திரவ அழுத்தத்திற்கு உட்படுத்தப்படும் போது பின்வரும் அழுத்தங்களில் எது உருவாகிறது?

(i) Circumferential stresses
சுற்றளவு அழுத்தங்கள்

(ii) Longitudinal stresses
நீளமான அழுத்தங்கள்

(iii) Radial stresses
ரேடியல் அழுத்தங்கள்

(A) (i) only
(i) மட்டுமே

(B) (i) and (iii) only
(i) மற்றும் (iii) மட்டுமே

(C) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டுமே

(D) (ii) and (iii) only
(ii) மற்றும் (iii) மட்டுமே

(E) Answer not known
விடை தெரியவில்லை

172. A thin cylinder of inner radius 500 mm and thickness 10 mm is subjected to an internal pressure of 5MPa. The average circumferential (Hoop) stress in MPa is
உள் ஆரம் 500 மிமீ மற்றும் 10 மிமீ தடிமன் கொண்ட ஒரு மெல்லிய உருளை 5MPa இன் உள் அழுத்தத்திற்கு உட்பட்டது. MPa இல் சராசரி சுற்றளவு (வளைய) அழுத்தம்

(A) 100 MPa

(B) 250 MPa

(C) 500 MPa

(D) 1000 MPa

(E) Answer not known
விடை தெரியவில்லை

173. The variation of hoop stress across the thickness of a thick cylinder is
தடிமனான சிலிண்டரின் தடிமன் முழுவதும் வளைய அழுத்தத்தின் மாறுபாடு என்பது ——————

(A) linear
நேரியல்

(B) parabolic
பரவளைய

(C) quadratic
இருபடி

(D) uniform
சீருடை

(E) Answer not known
விடை தெரியவில்லை

174. A cantilever beam AB of length "l" has a moment "M" applied at free end. The deflection at the free end B is _____.

கொடுங்கை விட்டம் ABயின் நீளம் "l" இல் ஒரு கணம் "M" ஐ கட்டுறா முனையில் கொடுக்கப்படுகிறது. கட்டுறாமுனை B இல் உள்ள விலகலானது.

(A) $\frac{M^2 l}{EI}$

(B) $\frac{Ml^2}{2EI}$

(C) $\frac{Ml}{2EI}$

(D) $\frac{Ml^3}{2EI}$

(E) Answer not known
விடை தெரியவில்லை

175. In a thick cylinder pressurized from inside, the hoop stress is maximum at

உள்ளே இருந்து அழுத்தம் கொடுக்கப்பட்ட ஒரு தடிமனான உருளையில், வளைய தகைவு அதிகபட்சமாக இருக்கும்

(A) The centre of the wall thickness
சுவரின் தடிமன் மையம்

(B) The outer radius
வெளி ஆரம்

(C) The inner radius
உள் ஆரம்

(D) Both the inner and the outer radii
உள் மற்றும் வெளி ஆரம் இரண்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

176. The extension in the bar due to rise in temperature will be
வெப்பநிலை உயர்வு காரணமாக பட்டையில் நீட்டிப்பு ——————

(A) $\alpha(t_2 - t_1)l$

(B) $\alpha/(t_2 - t_1)l$

(C) $\alpha l/t_2 - t_1$

(D) $\frac{t_2 - t_1}{\alpha l}$

(E) Answer not known
விடை தெரியவில்லை

177. Design of shaft made of brittle material is based on
நொறுங்கும் பொருட்களால் ஆன தண்டின் வடிவமைப்பு எதன் மூலம் மேற்கொள்ளப்படுகிறது

(A) Guest's theory
கெஸ்ட் தேற்றம்

(B) Rankine's theory
ரேன்கைன் தேற்றம்

(C) St. Venant's theory
புனித வெனான்ட் தேற்றம்

(D) Von-Mises theory
வான் மைசஸ் தேற்றம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

178. On a mild steel specimen, when simple tension test is carried out sliding occurs approximately 45° to the axis of the specimen. This shows that failure in this case is due to the maximum shear stress rather than the

ஒரு மென் எஃகு மாதிரியில் எளிய இழுவிசை சோதனை மேற்கொள்ளும் போது 45°க்கு சறுக்குகிறது. இதற்கு காரணமாக இருக்கும் குலைவு ———— அன்றி மேக்ஸிமம் சியர் தகைவு ஆகும்.

(A) Compressive stress
இறுக்கத் தகைவு

(B) Bending stress
வளைவு தகைவு

(C) Direct tensile stress
நேரடி இழுதகைவு

(D) Both bending and tensile stress
வளைவு தகைவு மற்றும் இழுதகைவு

(E) Answer not known
விடை தெரியவில்லை

179. Polar moment of inertia of a circle is given by

ஒரு வட்டத்தின் துருவ சடத்துவ திருப்பு திறன் யாது?

(A) $\frac{\pi}{64}d^4$

(B) $\frac{\pi}{32}d^4$

(C) $\frac{\pi}{16}d^4$

(D) $\frac{\pi}{32}d^3$

(E) Answer not known
விடை தெரியவில்லை

180. A boiler is subjected to an internal steam pressure of 2 N/mm^2. The thickness of boiler plate is 2 cm and permissible tensile stress is 120 N/mm^2. Find out the maximum diameter, when efficiency of longitudinal joint is 90% and that of circumferential joint is 40%.
ஒரு கொதிகலன் 2 N/mm^2 இன் உள் நீராவி அழுத்தத்திற்கு உட்பட்டது கொதிகலன் தட்டின் தடிமன் 2 cm மற்றும் அனுமதிக்கப்பட்ட இழுவிசை 120 N/mm^2 ஆகும். நீளமான மூட்டின் செயல்திறன் 90% ஆகவும் மற்றும் பரிதி மூட்டின் செயல்திறன் 40% ஆகவும் இருந்தால், அதிகபட்ச விட்டமானது.

(A) 182 cm
(B) 192 cm
(C) 236 cm
(D) 172 cm
(E) Answer not known
விடை தெரியவில்லை

181. In terms of Poisson's ratio (μ) the ratio of Young's Modulus (E) to Shear Modulus (G) of Elastic materials is
பாய்சனின் விகிதத்தின் அடிப்படையில் (μ) மீள் பொருட்களின் யங்ஸ் மாடுலஸ் (E) மற்றும் ஷியர் மாடுலஸ் (G) விகிதம்

(A) $2(1+\mu)$
(B) $2(1-\mu)$
(C) $\frac{1}{2}(1+\mu)$
(D) $\frac{1}{2}(1-\mu)$
(E) Answer not known
விடை தெரியவில்லை

182. ———— theory is suitable for Brittle materials.
———— கோட்பாடு உள்ள, உடையக்கூடிய உலோகங்கள் பொருத்தமானது,

(A) Maximum principal strain theory
அதிகபட்ச முதன்மை திரிபு கோட்பாடு

(B) Distortion energy theory
சிதைவு ஆற்றல் கோட்பாடு

(C) Maximum shear stress theory
அதிகபட்ச சியர் தகைவு கோட்பாடு

(D) Maximum principal stress theory
அதிகபட்ச முதன்மை தகைவு கோட்பாடு

(E) Answer not known
விடை தெரியவில்லை

183. The secondary forces in reciprocating mass on engine frame are
இயந்திர சட்டகத்தின், ஊடாட்ட பொருண்மையின் இரண்டாம் நிலை விசைகள்

(A) Of same frequency as of primary forces
முதன்மை விசைகளின் அதே அதிர்வெண்

(B) One-third of frequency as of primary forces
முதன்மை விசைகளின் அதிர்வெண்ணில் மூன்றில் ஒரு பங்கு

(C) Four times the frequency as of primary forces
முதன்மை விசைகளின் அதிர்வெண்ணை விட நான்கு மடங்கு

(D) Twice the frequency as of primary forces
முதன்மை விசைகளின் அதிர்வெண்ணை விட இரண்டு மடங்கு

(E) Answer not known
விடை தெரியவில்லை

184. In flat collar bearings, the frictional torque for uniform pressure is ___(1)___ than that of uniform wear. Hence, for safe design of bearing surfaces when power lost in friction is to be determined and no assumption is mentioned, assume ___(2)___

தட்டையான காலர் தாங்கிகளில், சீரான அழுத்தத்திற்கான உராய்வு திருப்பு விசை சீரான தேய்மானத்தைவிட ___(1)___ இருக்கும். எனவே, உராய்வில் இழக்கப்படும் திறன் தீர்மானிக்கப்பட வேண்டிய மற்றும் எந்த அனுமானமும் குறிப்பிடாதபோது, தாங்கு பரப்புகளை பாதுகாப்பாக வடிவமைக்க கருதுக ___(2)___.

(A) (1) less (2) uniform wear

(1) குறைவாக (2) சீரான தேய்வு

(B) (1) greater (2) uniform pressure

(1) அதிகமாக (2) சீரான அழுத்தம்

(C) (1) greater (2) uniform wear

(1) அதிகமாக (2) சீரான தேய்வு

(D) (1) less (2) uniform pressure

(1) குறைவாக (2) சீரான அழுத்தம்

(E) Answer not known

விடை தெரியவில்லை

185. In dynamic balancing of a single rotating mass, the net dynamic forces and couple acting on the shaft is zero. For complete dynamic balance, the minimum number of balancing masses introduced is/are.

ஒற்றை சுழலும் எடையின் இயக்கக சமன்செய்தலில், மொத்த இயக்கக விசைகள் மற்றும் சுழலிரட்டைகள் ஒரு உருளையின் மீது செயல்படும் போது அதன் மதிப்பு பூஜ்ஜியம் ஆகும். மொத்த இயக்கக சமன்செய்தலுக்கு, எத்தனை சமன்செய் எடை/எடைகள் பொருத்தப்பட வேண்டும்?

(A) 1

(B) 2

(C) 3

(D) 4

(E) Answer not known
விடை தெரியவில்லை

186. The speed at which the shaft runs so that the deflection of the shaft from the axis of rotation becomes infinite, is known as Whirling Speed (N_c) and is given by

where δ is deflection

தண்டு இயங்கும் வேகம், இதனால் சுழற்சியின் அச்சில் இருந்து தண்டு விலகல் எல்லையற்றதாக மாறும், இது சுழலும், வேகம் (N_c) என அறியப்படுகிறது மற்றும் கீழ்கண்டவாறு வழங்கப்படுகிறது.

δ – விலக்கம் (Deflection).

(A) $N_c = \frac{0.4985}{\sqrt{\delta}}$

(B) $N_c = \sqrt{\frac{0.4985}{\delta}}$

(C) $N_c = 0.4985 \times \sqrt{\delta}$

(D) $N_c = 0.4985 \times \delta$

(E) Answer not known
விடை தெரியவில்லை

187. Two equal forces are acting at a point with an angle of 60° between them. If the Resultant Force is equal to $20\sqrt{3}N$, find the magnitude of each force

இரண்டு சமமான விசைகள் ஒரு புள்ளியில் 60° கோணத்தில் செயல்படுகின்றன. இதன் விளைவு விசை $20\sqrt{3}$ நி-க்கு சமமாக இருந்தால், ஒவ்வொரு விசையின் அளவையும் கண்டறியவும்

(A) 20 N
20 நி

(B) 6 N
6 நி

(C) 28 N
28 நி

(D) 40 N
40 நி

(E) Answer not known
விடை தெரியவில்லை

188. If the equilibrium speed of the governors is constant for all radii of rotation of balls, then the governors are said to be

ஆளியின் சமநிலை வேகம், ஆளி பந்துகளின் எல்லா ஆரச் சுழற்சிகளுக்கும் மாறாமல் சமமாக ஒரே நிலையில் இருந்தால் அந்த ஆளி இவ்வாறு அழைக்கப்படும்.

(A) Sensitive
நுண் உணர்வு

(B) Isochronous
சமஅலைவு நேரம்

(C) Hunting
மிகைப்பு

(D) Stable
நிலைத்தன்மை

(E) Answer not known
விடை தெரியவில்லை

189. If the friction angle 'ϕ' is ———— lead angle Q, the screw is said to be self locking.
ஒரு திருகானது சுயபூட்டப்பட்ட நிலையை அடைய அதன் உராய்வு கோணம் ϕ, திருகு கோணம் Q விட ————

(A) larger than
அதிகம்

(B) lesser than
குறைவு

(C) equal to
ஒரே அளவு

(D) opposite to
எதிர் துருவம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

190. The mechanical advantage in mechanisms should be
இயங்கமைப்புகளில் உள்ள இயந்திரவியல் மேம்பாடானது.

(A) equal to 1
ஒன்றுக்கு சமம்

(B) greater than 1
ஒன்றை விட பெரியது

(C) less than 1
ஒன்றை விட சிறியது

(D) equal to 0
பூஜ்ஜியத்திற்கு சமம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

191. ———— principle states that the inertia forces, couples and external force and torque on body together gives statistical equilibrium.

———— கொள்கை இடைப்பட்ட விசைகள் ஜோடிகளுக்கு புற விசையையும் உடலில் முறுக்கு விசைகளையும் ஒன்றாகச் சேர்த்து புள்ளியியல் சமநிலையை அளிக்கிறது என்று கூறுகிறது.

(A) Edward Jenner Principle
எட்வர்ட் ஜென்னர் கொள்கை

(B) D'Alembert's Principle
டி அலம்பெர்ட்ஸ் கொள்கை

(C) Newton's Law of Motion
நியூட்டனின் இயக்க விதி

(D) Newton's Law of Collision
நியூட்டனின் மோதல் விதி

(E) Answer not known
விடை தெரியவில்லை

192. A body falling freely, under the actions of gravity passes two points 10 meters apart vertically in 0.2 seconds from what height, above the higher point, did it start to fall.

புவியீர்ப்பு விசையின் கீழ் தன்னிச்சையாக விழும் ஒரு பொருள் 0.2 வினாடிகளில் செங்குத்தாக 10 மீட்டர் இடைவெளியில் இரண்டு புள்ளிகளை கடந்து செல்கிறது. உயரமான புள்ளிக்கு மேலே எந்த உயரத்தில் இருந்து அது விழ ஆரம்பித்தது?

(A) 112.5 m
112.5 மீ

(B) 122.5 m
122.5 மீ

(C) 132.5 m
132.5 மீ

(D) 142.5 m
142.5 மீ

(E) Answer not known
விடை தெரியவில்லை

193. The engine of an Aeroplane rotates in clockwise direction when seen from the tail end and the aeroplane takes a turn to the left. The effect of the Gyroscopic couple on the aeroplane will be

ஒரு விமானத்தின் வால் முனையிலிருந்து பார்க்கும் பொழுது இயந்திரம் பொறியானது கடிகார திசையில் சுழல்கின்றது மற்றும் விமானம் இடப்புறமாக திரும்புகின்றது எனில் விமானத்தில் செயல்படும் கைரோஸ்கோப்பிக் இரட்டையின் விளைவு என்ன?

(A) To raise the nose and dip the tail

கூர்மையான முன்பக்கம் உயரும் மற்றும் வால் பகுதி தாழ்ந்து செல்லும்

(B) To dip the nose and raise the tail

கூர்மையான முன்பக்கம் தாழ்ந்து செல்லும் மற்றும் வால் பகுதி உயரும்

(C) To raise the nose and tail

கூர்மையான பகுதி மற்றும் வால் பகுதி இரண்டும் உயரும்

(D) To dip the nose and tail

கூர்மையான பகுதி மற்றும் வால் பகுதி தாழ்ந்து செல்லும்

(E) Answer not known

விடை தெரியவில்லை

194. It is desired to avoid interference in a pair of spur gears having a 20° pressure angle with increase in pinion to gear speed ratio, the minimum number of teeth on the pinion.

20° அழுத்தம் கோணம் கொண்ட ஒரு ஜோடி ஸ்பர் கியர்களில் குறுக்கீடு தவிர்க்க விரும்பப்படுகிறது. கியர் வேக விகிதத்திற்கு பினியனின் அதிகரிப்புடன், பினியனில் உள்ள பற்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை என்னவாகும்.

(A) Increases
அதிகரிக்கிறது

(B) Decreases
குறைகிறது

(C) First increases and then decreases
முதலில் அதிகரித்து பின்னர் குறையும்

(D) Remains unchanged
மாறாமல் இருக்கும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

195. The maximum efficiency of a screw Jack.
ஒரு திருகு தூக்கியின் செயல்திறனுக்கான சூத்திரம்.

(A) $\frac{1+\tan\phi}{1-\tan\phi}$

(B) $\frac{1-\tan\phi}{1+\tan\phi}$

(C) $\frac{1+\sin\phi}{1-\sin\phi}$

(D) $\frac{1-\sin\phi}{1+\sin\phi}$

(E) Answer not known
விடை தெரியவில்லை

196. Match the following :
பொருத்துக :

Connections இணைப்புகள்	Reactions at supports இணைப்பின் செயல்பாடுகள்
(a) Rollers உருளைகள்	1. One reaction force with known line of action ஒரு விசை எந்த கோட்டில் செல்கிறது என்ற தெளிவுடன்
(b) Hinge support கீல் பிணைப்பு	2. Two reaction forces and one couple இரண்டு விசைகள் மற்றும் ஒரு பிணை
(c) Fixed support உறுதியான பிணைப்பு	3. Two reaction forces இரண்டு விசைகள்

	(a)	(b)	(c)
(A)	1	3	2
(B)	1	2	3
(C)	2	3	1
(D)	3	1	2

(E) Answer not known
விடை தெரியவில்லை

197. According to Varignon's Principle of moments
Varignon's திருப்புத்திறன்களின் கொள்கை என்பது

(A) If a system of coplanar forces is in equilibrium, then their algebraic sum is zero

சமதள விசைகளின் அமைப்பு சமநிலையில் இருந்தால், அவற்றின் இயற்கணிதத்தொகை பூஜ்ஜியமாகும்

(B) If a system of coplanar forces in equilibrium, then the algebraic sum of their moments about any point in their plane is zero.

சமதள விசைகளின் அமைப்பு சமநிலையில் இருந்தால், அவற்றின் தளத்தின் எந்த புள்ளியிலும் அவற்றின் கணங்களின் இயற்கணிதத் தொகை பூஜ்ஜியமாகும்


(C) The algebraic sum of the moments of any two forces about any point is equal to moment

எந்த ஒரு புள்ளியைப் பற்றிய எந்த இரண்டு சக்திகளின் கணங்களின் இயற்கணிதத் தொகையானது, அதே புள்ளியில் அவற்றின் விளைவின் கணத்திற்கு சமம்


(D) None of the above
மேலே எதுவும் இல்லை

(E) Answer not known
விடை தெரியவில்லை


198. Find the correct values of x, y & z of force polygon diagram to the given free body diagram.
கீழ்க்கண்ட தனித்த பொருளின் விசைப்படம் மூலம் படை பலகோண வரைப்படத்தின் x, y & z ன் சரியான மதிப்புகளை கண்டறிக.




Free body diagram



Force Polygon diagram



தனித்த பொருளின் விசைப்படம்



படை பலகோண வரைப்படம்

(A) $x = F_{CB}$, $y = F_{CD}$; $z = F_{CA}$

(B) $x = F_{BC}$, $y = F_{CD}$; $z = F_{CA}$

(C) $x = F_{CB}$, $y = F_{DC}$; $z = F_{CA}$

(D) $x = F_{CB}$, $y = F_{CD}$; $z = F_{AC}$

(E) Answer not known
விடை தெரியவில்லை

199. The centre of gravity of hemisphere lies at a distance ———— from its base measured along the vertical radius

அரைக்கோளத்தின் ஈர்ப்பு மையம் செங்குத்து ஆரத்துடன் அளவிடப்பட்ட அதன் அடிப்பகுதியில் இருந்து ———— தொலைவில் உள்ளது.

(A) $\frac{3r}{8}$

(B) $\frac{3}{8r}$

(C) $\frac{8r}{3}$

(D) $\frac{8}{3r}$

(E) Answer not known
விடை தெரியவில்லை

200. The load varies from 'zero' at one support to 'W' at the other. Such a load is called as

பளுவானது ஒரு முனையில் 'பூஜ்ஜியம்' முதல் மறுமுனையில் 'W' வரை மாறுபடுகிறது. அத்தகைய சுமை இவ்வாறு அழைக்கப்படும்.

(A) Uniformly distributed load
சீராக பரவும் சுமை

(B) Uniformly varying load
சீராக மாறுபடும் சுமை

(C) Uniformly distributed load & triangular load
சீராக பரவும் சுமை & முக்கோண சுமை

(D) Uniformly varying load & triangular load
சீராக மாறுபடும் சுமை & முக்கோண சுமை

(E) Answer not known
விடை தெரியவில்லை